Regional Bulletin

27.01.2025 18.10

வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

நாள் 27.01.2025 திங்கட்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை உத்தராகண்ட் மாநிலம் டேராடூனில், 38ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளைத் தொடக்கி வைக்கிறார்.

புவனேஷ்வரில், செழிப்பான ஒடிசா-ஒடிசாவில் தயாரிப்போம் மாநாட்டையும், பிரதமர் நாளை தொடக்கி வைக்கிறார்.

ஒலி-ஒளி மற்றும் கேளிக்கை துறை தொடர்பான WAVES உச்சி மாநாட்டை முன்னிட்டு, மத்திய அரசு, WAVES பஜார் உள்ளிட்ட முன் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

பொது சிவில் சட்டம், நாட்டிலேயே முதல் முறையாக, உத்தராகண்டில், இன்று முதல் அமலுக்கு வந்துள்ளது.

மோடி விளையாட்டு (11 )

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை உத்தராகண்ட் மாநிலம் டேராடூனில், 38ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளைத் தொடக்கி வைக்கிறார். மகாராணா பிரதாப் விளையாட்டு அரங்கில் நடைபெறும் இவ்விழாவில், மத்திய அமைச்சர்களும், இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் மற்றும் விளையாட்டு வீரர்கள் பலரும் பங்கேற்க உள்ளனர். 38ஆவது

தேசிய விளையாட்டுப் போட்டிகள், நாளை முதல் பிப்ரவரி 14ஆம் தேதி வரை, உத்தராகண்ட் மாநிலத்தின் 11 நகரங்களில் நடைபெறுகின்றன. 35 விளையாட்டுப் பிரிவுகளில், மொத்தம் 48 போட்டிகள் இதில் இடம் பெறும். இதற்கிடையே தேசிய விளையாட்டுப் போட்டிகளின் முறைப்படியான தொடக்கத்திற்கு முன்பாகவே, உத்தம்சிங் நகரில் இன்று நடைபெற்ற, ட்ரையத்லான் போட்டிகளில் மணிப்பூர் முதலிடம் பெற்றது.

மோடி – ஒடிசா (9 )

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை புவனேஷ்வரில், செழிப்பான ஒடிசா- ஒடிசாவில் தயாரிப்போம் மாநாட்டைத் தொடக்கி வைக்கிறார். இந்தியா மற்றும் 20க்கும் மேற்பட்ட வெளிநாடுகளில் இருந்து சுமார் 7 ஆயிரத்து 500 பிரதிநிதிகள், இந்த 2 நாள் மாநாட்டில் பங்கேற்க உள்ளனர். ஒடிசா மாநிலத்தை வலுவான-துடிப்பான பொருளாதாரமாக மாற்றும் நோக்கத்திலான இம்மாபெரும் வர்த்தக மாநாட்டில், நூற்றுக்கும் மேற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்றும், இதனால் சுமார் மூன்றரை லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப் படுவதாகவும் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மோடி நன்றி (11 )

76ஆவது குடியரசு தினத்தை ஒட்டி இந்தியாவிற்கு வாழ்த்து தெரிவித்த உலகத் தலைவர்களுக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார். சமூக ஊடகத்தில் பிரஞ்சு பிரதமர் திரு. இமானுவேல் மேக்ரோன் வெளியிட்ட வாழ்த்துச் செய்திக்கான பதிலில், பாரீசில் நடைபெறவுள்ள செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டில் திரு.மேக்ரோனை சந்திக்க தாம் ஆர்வம் கொண்டுள்ளதாக பிரதமர் கூறியுள்ளார். கடந்த ஆண்டு 75ஆவது இந்திய குடியரசு தினவிழாவில் தலைமை விருந்தினராக திரு. மேக்ரோன் பங்கேற்றது, இருதரப்பு உறவுகளின் உச்ச புள்ளியாகவே அமைந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

அயர்லாந்து பிரதமர் உள்ளிட்ட உலகத் தலைவர்களின் வாழ்த்துக்கும், சமூக ஊடகத்தில் பிரதமர் நன்றி தெரிவித்துள்ளார்.

WAVES 1 (15)

ஒலி-ஒளி மற்றும் கேளிக்கை துறை தொடர்பான WAVES உச்சி மாநாட்டை முன்னிட்டு புதுடெல்லியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள WAVES பஜார், மற்றும் WAH உஸ்தாத் சவால் போட்டியை, மத்திய தகவல்-ஒலிபரப்பு அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் ஆகியோர் தொடக்கி வைத்து, WAVES விருதுகளுக்கான அறிவிப்பையும் வெளியிட்டனர்.

வளமான கலாச்சார பாரம்பரியம் மற்றும் கதை சொல்லும் மரபு கொண்ட இந்தியா தற்போது உலக அரங்கில், மிகுந்த கவனம் பெற்று வருவதாக, அமைச்சர் திரு. வைஷ்ணவ் நிகழ்ச்சியில் பேசுகையில் கூறினார்.

கலாச்சாரமே, இந்தியாவின் நிஜமான சக்தி என்றும், அரசின் புதிய முன் முயற்சிகளால், கதை சொல்லும் மரபு உட்பட இந்தியாவின் மென் ஆற்றலை, உலகிற்கு எடுத்துச் செல்ல ஏதுவாகும் என்று அமைச்சர் திரு.ஷெகாவத் தெரிவித்தார்.

புதிய WAVES முன்முயற்சிகள் குறித்து தகவல்-ஒலிபரப்புத் துறை செயலர் திரு. சஞ்சய் ஜாஜூ வெளியிட்ட தகவல்கள்...

(... வாய்ஸ்...)

WAVES 2 (8)

(... வாய்ஸ்...)

ஊடகங்களின் உள்ளடக்கத் தேவைகளை உருவாக்கும் படைப்பாளர்களுக்கும், ஊடகங்களுக்கும் இடையே, பூகோள எல்லைகளைக் கடந்த பாலமாக, WAVES பஜார் திகழும் என்று தகவல்-ஒலிபரப்புத் துறை செயலர் தெரிவித்தார். பாரம்பரியக் கலைகளில்

அலாதியான திறமைகளைக் கண்டுபிடிக்க WAH உஸ்தாத் சவால் போட்டி உதவிகரமாக இருக்கும் என்று அவர் கூறினார். WAVES விருதுகளுக்கு விண்ணப்பிக்கும் நடைமுறைகள், பிப்ரவரி 15ஆம் தேதி முதல் தொடங்கும் என்றும் திரு. சஞ்சய் ஜாஜூ தெரிவித்தார்.

டெல்லி தேர்தல் (18)

டெல்லி சட்டமன்ற தேர்தலுக்கான ஆம் ஆத்மி கட்சியின் தேர்தல் அறிக்கையை அக்கட்சியின் அமைப்பாளர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் புதுடெல்லியில் இன்று வெளியிட்டார். மருத்துவ சிகிச்சைக்கான சஞ்சீவனி திட்டம், பழைய தண்ணீர் வரி ரத்து, எல்லா பெண்களுக்கும் மாதம் 2 ஆயிரத்து 100 ரூபாய் நிதியுதவி உள்ளிட்ட வாக்குறுதிகள் ஆம் ஆத்மி கட்சியின் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளன. பாரதீய ஜனதாவும் காங்கிரஸ் கட்சியும் பொய் வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்குவதாக தேர்தல் அறிக்கை வெளியிட்டு பேசுகையில் திரு. கெஜ்ரிவால் குற்றம் சாட்டினார். இதற்கிடையே மூத்த பிஜேபி தலைவர் திரு. சம்பீத் பாத்ரா புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், அமிர்தசரஸில் அண்ணல் அம்பேத்கர் சிலையை சிலர் சேதப்படுத்தியது, பஞ்சாப் மாநிலத்தின் சட்டம்-ஒழுங்கு நிலவரம் சீர்குலைந்து விட்டதையே பிரதிபலிப்பதாக கூறினார். இதற்காக திரு. அரவிந்த் கெஜ்ரிவால் மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் அவர் கோரினார். ஆம் ஆத்மி தேர்தல் அறிக்கை குறித்து காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் திருமதி.அஸ்மாவிடம் கருத்து கேட்டதற்கு, முந்தைய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிய ஆம்ஆத்மி கட்சியை மக்கள் ஏற்கனவே புறக்கணித்து விட்டதாக அவர் பதிலளித்தார்.

பொது சிவில் சட்டம் (13 )

உத்தராகண்டில் பொது சிவில் சட்டத்தின் அமலாக்கத்திற்கான விதிமுறைகளையும், இது தொடர்பான இணையதளத்தையும், முதலமைச்சர் திரு. புஷ்கர்சிங் தாமி, டேராடூனில் இன்று தொடக்கி

வைத்தார். இதை தொடர்ந்து, நாட்டிலேயே பொது சிவில் சட்டத்தை அமல்படுத்தும் முதலாவது மாநிலமாக உத்தராகண்ட் மேம்பட்டுள்ளது. திருமணம், விவாகரத்து, வாரிசுரிமை உட்பட நான்கு பிரிவுகளாக அமைந்துள்ள இந்த பொது சிவில் சட்டத்தில், அனைத்து மதங்களைச் சேர்ந்த ஆண்-பெண் அனைவருக்கும் திருமணப் பதிவிற்கான காலக்கெடுவும், விவாகரத்து கோருவதற்கான காரணங்களும், ஒரே சீராக விதிக்கப்பட்டுள்ளன. பொது சிவில் சட்டத்தை உத்தராகண்டில் அமல்படுத்துவது குறித்து, அம்மாநில அரசு ஏற்கனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு பல கட்ட பயிற்சிகளை அளித்து இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அமித் ஷா (15 )

பிரயாக்ராஜ் நடைபெறும் மகா கும்பமேளாவில், மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா இன்று, திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினார். உத்தரபிரதேஷ் முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் மற்றும் சாதுக்கள் பலரும், மத்திய அமைச்சரோடு இணைந்து புனித நீராடினர். சமத்துவம் மற்றும் நல்லிணக்கத்தின் நற்செய்தியை உலகிற்கு வழங்குவதே, சனாதன தர்மத்தின மாபெரும் விழாவான கும்பமேளா என்று சாதுக்களிடையே பேசுகையில் உள்துறை அமைச்சர் கூறினார். பிரயாக்ராஜ் நாட்டின் முக்கிய புனித தலம் மட்டுமே அல்ல என்றும், இந்திய ஞானம், நம்பிக்கை மற்றும் பன்முகத் தன்மையின் சங்கமமாகவே பிரயாக்ராஜ் திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டார். மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ-வும் இன்று திரிவேணி சங்கத்தில் புனித நீராடினார். கடந்த 13ஆம் தேதி தொடங்கிய மகா கும்பமேளா வரும் 26ஆம் தேதி வரை நடைபெறும் விழாவை ஒட்டி இதுவரை 13 கோடிக்கும் மேற்பட்ட பக்தர்கள், திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தட்சணாமூர்த்தி (8 )

புதுச்சேரியைச் சேர்ந்த தவில் இசைக் கலைஞர் திரு.தட்சணாமூர்த்திக்கு, மத்திய அரசு பத்மஸ்ரீ விருது அறிவித்துள்ளது. அபிஷேகப்பாக்கம் கெங்கையம்மன் கோவில் வீதியில் வசித்து வரும் திரு.தட்சணாமூர்த்தி 15 வயதிலேயே தவில் வாசிக்க கற்றுக்கொண்டு, சுமார் 50 ஆண்டுகளுக்கும் மேலாக தவில் கலைஞராக கலைச் சேவை புரிந்து வருகிறார். பாரம்பரிய இசைக் குடும்பத்தைச் சேர்ந்த அவர் ஏற்கனவே புதுச்சேரி அரசின் கலைமாமணி விருது உட்பட பல்வேறு விருதுகளையும் வென்றுள்ளார்.

பத்மஸ்ரீ விருதுக்கு நன்றி தெரிவித்து, தவில் கலைஞர் திரு.தட்சணாமூர்த்தி எமது செய்தியாளரிடம் பேசுகையில் ....

(.... வாய்ஸ் ....)

பதக்கம் அறிவிப்பு (10)

புதுச்சேரியில், வயர்லஸ் பிரிவு காவல்துறை கண்காணிப்பாளர் திரு.பாஸ்கரனுக்கு மிகச்சிறப்பான சேவைக்கான குடியரசு தலைவரின் பதக்கம் அறிவிக்கப் பட்டுள்ளது. கடற்கரைச் சாலை காந்தி திடலில் நேற்று நடைபெற்ற குடியரசு தின விழாவில், இவ்வாறு அறிவிக்கப்பட்டது. காவல் துறையின் சிக்மா செக்யூரிட்டி பிரிவு உதவி ஆய்வாளர் திரு. ஆனந்த், போலிஸ் பயிற்சிப் பள்ளியைச் சேர்ந்த தலைமைக் காவலர் திரு. கோபதி ஆகியோருக்கு சிறந்த சேவைக்கான குடியரசு தலைவர் பதக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது. இது அல்லாது, மாநில அரசால் வழங்கப்படும் காவல்துறை விருதுகளுக்கான பெயர்ப் பட்டியலும் குடியரசு தினவிழாவில் வெளியிடப்பட்டது.

பூமி பூஜை ( 5 )

காலாப்பட்டு தொகுதியில், கருவடிக்குப்பம் பகுதியில் உள்ள 17 வீதிகளில், பொதுப்பணித்துறை மூலம், மொத்தம் 5 கோடி ரூபாய் மதிப்பிட்டில், சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகளை, சட்டமன்ற

உறுப்பினர் திரு. கல்யாண சுந்தரம் இன்று பூமி பூஜை செய்து தொடக்கி வைத்தார். பொதுப்பணித்துறை அதிகாரிகள் மற்றும் ஊர் பிரமுகர்கள் உடனிருந்தனர்.

சாலை பாதுகாப்பு மாதம் (8)

36ஆவது சாலைப் பாதுகாப்பு மாதத்தின் ஒரு பகுதியாக, காரைக்காலில் போக்குவரத்து துறை சார்பில் இன்று நடைபெற்ற விழிப்புணர்வு ஹெல்மட் பேரணியை, மாவட்ட துணை ஆட்சியர் திரு. வெங்கடகிருஷ்ணன் தொடக்கி வைத்தார். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து காரைக்கால் நகரின் முக்கிய வீதிகள் வழியாக மீண்டும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வந்து சேர்ந்த இப்பேரணியில், போக்குவரத்து துறை ஊழியர்கள் மற்றும் மோட்டார் வாகன விற்பனையாளர்கள் பங்கேற்றனர்.

ஹாக்கி ( 6 )

ஹாக்கி இண்டியா லீக் போட்டித் தொடரின் ஆடவர் பிரிவில் ஒடிசா மாநிலம் ரூர்கேலாவில் இன்று மாலை நடைபெறும் போட்டியில், Shrachi ரார் பெங்கால் டைகர்ஸ் அணியும், டெல்லி எஸ்ஜி பைப்பர்ஸ் அணியும் மோதுகின்றன. JSW சூர்மா கிளப் - Vedanta கலிங்கா லேன்சர்ஸ் அணிகளுக்கு இடையிலான மற்றொரு போட்டி, இன்று இரவு 8.15 மணிக்கு ரூர்கேலாவில் நடைபெற உள்ளது.

கால்பந்து (6 )

இண்டியன் சூப்பர் லீக் கால்பந்துப் போட்டித் தொடரில் இன்று மாலை கொல்கத்தாவில் நடைபெறும் போட்டியில், மோகன் பகான் சூப்பர் ஜெயண்ட் அணியும், பெங்களூரு ஃபுட்பால் கிளப் அணியும் மோதுகின்றன. மோகன் பகான் சூப்பர் ஜெயண்ட் அணி, இதுவரை இத்தொடரில் ஆடிய எல்லா 7 போட்டிகளிலும் வெற்றி பெற்று, புள்ளிப்

பட்டியலில், முதல் இடத்தில் உள்ளது. பெங்களூரு அணி, நான்காம் இடத்தில் உள்ளது.

பாரத் பர்வ் (10 )

புதுடெல்லியில் நேற்று குடியரசு தினவிழாவில் இடம்பெற்ற அலங்கார ஊர்திகள், செங்கோட்டையில் நடைபெறும் பாரத் பர்வ் விழாவில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. வரும் 31ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இவ்விழாவில், ராணுவ இசை குழுக்களின் பேண்டு வாத்திய நிகழ்ச்சிகளும், மாநில மற்றும் யூனியன் பிரதேச கலைஞர்கள் வழங்கும் கலாச்சார நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன. கைவினை பஜார் மற்றும் உணவு அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. நாட்டின் கலாச்சார பாரம்பரியத்துடன் பொதுமக்கள் தங்களை ஆழமாக இணைத்துக்கொள்ள ஏதுவாக, தேகோ அப்னா தேஷ் என்னும் மையக்கருத்து அடிப்படையில் இவ்விழா நடத்தப்படுகிறது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை உத்தராகண்ட் மாநிலம் டேராடூனில், 38ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளைத் தொடக்கி வைக்கிறார்.

புவனேஷ்வரில், செழிப்பான ஒடிசா-ஒடிசாவில் தயாரிப்போம் மாநாட்டையும், பிரதமர் நாளை தொடக்கி வைக்கிறார்.

ஒலி-ஒளி மற்றும் கேளிக்கை துறை தொடர்பான WAVES உச்சி மாநாட்டை முன்னிட்டு, மத்திய அரசு, WAVES பஜார் உள்ளிட்ட முன் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

பொது சிவில் சட்டம், நாட்டிலேயே முதல் முறையாக, உத்தராகண்டில், இன்று முதல் அமலுக்கு வந்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது RSS/MS/VM